# ஹக்மன பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 29 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹக்மன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பதவியணிக் கடன் காசுக் கணக்கில் இருந்து ரூபா 220,000 தொகையொன்று பொதுவான கணக்கிற்கு வரவு வைத்து காசு மாற்றல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 திகதிய அப் பணம், காசுப் மாற்றல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் மீதி அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஹக்மன நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு 2013 ஆண்டின் போது உரித்தாக்கப்பட்ட ரூபா 94,000,000 இற்கான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) வீத வரி பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 53,563 தொகை முன்வரும் காலத்திற்கான வீதவரியினை வீதவரி கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு மீதி ஒன்றென காட்டப்பட்டிருக்காமையால் அத் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீத வரியினை அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான சபை அமர்வுப் படி மீளளிப்புச் செய்யும் போது மோட்டார் சைக்கிள் கடன் தவணைப் பணமாக அறவிடப்பட்டுள்ள ரூபா 360,000 தொகை

ஆண்டிற்கான வருமான உதவி செலவு வைக்கப்பட்டு சம்பளங்கள் மற்றும் படிகள் செலவுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது பேரேட்டில் 309 செலவுத் தலைப்பிற்கு மூலதன செலவுகள் என மாதாந்தம் வரவு வைக்கப்படும் தொகை மற்றும் பி.ச.14 இன் பிரகாரம் அச் செலவு தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த தொகை இடையே வித்தியாசம் ரூபா 6,515,804 ஆகும்.

(ஊ) மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளில் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவுகள் மீது சபைக்கு சொந்தமாக காணப்படும் ரூபா 6,104,315 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஏனைய பௌதீக வளங்களின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54,455,220 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடு/ பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 55,287,087 ஆக காணப்படாமையால் வித்தியாசம் ரூபா 831,867 ஆகும்.

1.3.3 தொங்கல் கணக்குகள்

------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 873,211 இற்கான தொங்கல் கணக்கில் வரவு மீதியை தீர்க்கப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களில் இருந்து கழித்து காட்டப்பட்டிருந்தது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,283,988 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,899,732 ஆகும்.

(இ) ரூபா 1,704,583 பெறுமதியான 12 கணக்கு மீதிகள் கடந்த பல வருட காலம் முதல் தொடர்ந்து முன்கொண்டு வந்து காணப்பட்டதுடன் அவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 72,101,970 தொகை பெறுமதியான சொத்துக்கள் மற்றும் ரூபா 4,637,067 தொகை பெறுமதியான பொறுப்புக்கள் தொடர்பாக பட்டோலைகள், நாளது வரை மற்றும் முறையாகப் பேணப்படும் பதிவேடுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 5,453,698 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 2,440,901 ஆகும். மீளாய்வாண்டின் போது சபை சுயமாக உருவாக்கிய மற்றும் நியதிச் சட்ட ரீதியான வருமானம் ரூபா 18,094,441 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொகையில் சபையின் பதவியணிச் சம்பளம் மற்றும் படிகள் மேலதிக நேரப்படி மற்றும் ஏனைய படிகள் செலுத்துவதற்காக ரூபா 11,241,960 தொகை செலவினை மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. அவை மேற்கூறிய வருமானத்தின் நூற்றிற்கு 62 ஆகும். அதன் பிரகாரம் பதவியணி சம்பளம் மற்றும் படிகள் ஏனைய படிகள் செலுத்துவது தவிர சபையின் ஏனைய மீண்டுவரும் செலவுகளாகிய ரூபா 12,350,723 தொகையொன்று செலவு செய்வதற்காக மேற் கூறிய வருமானத்தில் இருந்து மீதியாகிய ரூபா 6,852,481 தொகை ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபைக்கு வருமானப் பற்றாக்குறை ஒன்றிற்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

----------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 387 | 439 | 639 |
| வாடகை | 6,377 | 5,029 | 557 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,905 | 890 | - |
| ஏனைய வருமானங்கள் | 10,820 | 11,734 | 6,385 |

2.2.2 வீத வரி மற்றும் ஏக்கர் வரி

----------------------------------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 891,430 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகள் மிகைக் கட்டணத்துடன் ரூபா 403,388 ஆகும். அதன் பிரகாரம் பெறவேண்டிய வீத வரி வருமானம் ரூபா 1,294,818 தொகை எனினும் மீளாய்வாண்டின் போது தண்டப் பணத்துடன் கிடைத்த தொகை ரூபா 753,079 ஆகும். 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீத வரித்தொகை ரூபா 541,751 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி ரூபா 88,960 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகள் ரூபா 9,620 ஆகும். அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 98,580 இற்கான பெற வேண்டிய ஏக்கர் வரித் தொகையில் ஆண்டின் போது ரூபா 600 மாத்திரமே கிடைத்திருந்தது. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஏக்கர் வரியின் பெறுமதி ரூபா 97,980 ஆகும்.

2.2.3 வாடகை

---------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தரை வரி ரூபா 261,900 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில்போடப்பட்டவை தண்டப்பணம் உட்பட ரூபா 149,930 ஆகும். ஆண்டின் போது தண்டப் பணத்துடன் கிடைத்த தொகை ரூபா 127,930 ஆகும். 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தரை வரி தொகை ரூபா 283,900 ஆகும்.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய தொகை கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 245,921 |
| முத்திரைக் கட்டணம் | 5,153,440 |

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 பாதைகள் முகாமைத்துவம்

------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் பிரதேச சபைக்கு சொந்தமான அதிகார பிரதேசம் 48.4 சதுர கி.மீற்றர்களாகும். அத்துடன் கிராம அலுவலர்கள் பிரவுகள் 34 ஆகும். பாதைகளின் நீளம் கி.மீ. அளவு கொங்கிரீட்/ தார், மண் பாதைகள் என அவற்றின் தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்தி சபைக்குச் சொந்தமான பாதைகளின் எண்ணிக்கையை பாதீட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 24 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபைக்குச் சொந்தமான பாதைகளை வர்த்தமானியில் பிரசுரித்து பகிரங்கப்படுத்த வேண்டும். எனினும் 1995 ஆண்டின் போது 136 பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் சபைக்கு சொந்தமான பாதைகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் பாதைகள் தொடர்பாக ஒவ்வொரு பாதையின் நீளம், அகலம், ஆரம்பிக்கும் இடம், முடிவடையும் இடம், அப் பாதைகளின் தன்மைகள் அதாவது தார், கொங்கிரீட் அச்சுக் கற்கள், சரளைக் கற்கள், வீதிக் கோடுகள் போன்ற தகவல்ளை உட்படுத்தி பாதைகள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். அத் தகவல்கள் முறைப்படி பதிவு செய்யப்பட்டு அப் பதிவேடு நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆண்டின் போது 01 தார் போடப்பட்ட பாதையும், 54 அச்சுக் கற்கள் பரப்பப்பட்ட பாதைகளும், 06 கொங்கிரீட் பாதைகளும், 04 சரளைக் கல் பாதைகளுமாக 7846.1 மீற்றர் பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 36,118,191 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் பாதை பதிவேடு முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

3.2.1 மல சல கூட மானியம்

--------------------------------------

2014 ஆண்டிற்கான பாதீட்டில் சுகாதார சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 164 நலன்பெறுவோருக்காக மல சல கூட மானியம் வழங்குவதற்காக ரூபா 960,000 தொகை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 164 நலன்பெறுவோர் தெரிவு செய்யும் போது கடைபிடிக்கப்பட்ட தகவு திறன்சார் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மானியங்கள் விண்ணப்பித்தல் தொடர்பான விண்ணப்பங்களில் நலன்பெறுவோரின் வருமானம் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ் வருமானம் குறிப்பிட்ட பிரிவின் கிராம அலுவலரினால் சான்றுபடுத்தப்பட வேண்டும் என முறைமை ஒன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் நலன்பெறுவோரின் வருமானம் தொடர்பாக சான்றிதழ் வழங்கியிருந்த முறை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) சபையினால் முன்னைய ஆண்டுகளிலும் மல சல கூட உதவி நிதி வழங்கியிருந்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கொடுப்பனவு பதிசெய்யப்பட்ட பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஒரு முறை மலசல கூட உதவி செலுத்திய நலன்பெறுவோருக்கு மீண்டும் ஒரு முறை உதவி செலுத்தப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) நலன்பெறுவோருக்கு மல சல கூட உதவி வழங்கும் போது ரூபா 5,000, ரூபா 6,000, ரூபா 8,000 ரூபா 10,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அவ்வாறு பலவின உதவி நிதி வழங்குவதற்கு சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் சுகாதார சேவை நிகழ்ச்சித் திட்டத்தில் பாதீட்டு மீண்டுவரும் வருமானம் ரூபா 5,836,110 ஆக காணப்பட்டதுடன் மீண்டுவரும் செலவுகள் ரூபா 7,587,250 ஆகும். அதன் பிரகாரம் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பற்றாக்குறை ரூபா 1,751,140 தொகையாகக் காணப்பட்ட போதிலும் மலசல கூட மானியமாக ரூபா 960,000 தொகை ஒன்று ஏற்பாடு மேற்கொள்வதற்கான காரணமாக கணக்குகளுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

(ஊ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132(ஓ) இன் பிரகாரம் சுகாதார விடயங்களுக்காக செலவிடப்பட்ட தொகை ஒரு ஆண்டின் போது ரூபா ஆயிரத்தை மிகைக்குமிடத்து அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை எழுத்து ரீதியாக பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறாயின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 94 நலன்பெறுவோருக்கு மல சல கூட மானியாமாக ரூபா 574,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.3 பயன்படுத்தப்படாத/ குறை பயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 2013 ஆண்டின் போது சபைக்கு உரித்தாக்கப்பட்ட நகர மண்டப கட்டிடம் நிர்மாண வேலைக் கிரயம் ரூபா 54,000,000 தொகை என வெளிப்படுத்தப்பட்டதுடன் இக் கட்டிடத்திற்கு தேவையான கருத்தரங்குக் கதிரைகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் அதே ஆண்டிலேயே வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(அ) நகர மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்க பணம் ரூபா 54,000,000 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் 02 வருடங்களில் பொது மக்கள் பயன்படுத்துவதற்காக திறக்கப்படாமையால் சபைக்கு பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது.

(ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து வழங்கியிருந்த 571 கதிரைகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அச் சொத்துக்களை 2014 ஆண்டின் போது பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

3.4 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் தரம் | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தரம் | 26 | 22 | 04 | - |
| ஆரம்ப தரம் | 38 | 41 | - | 03 |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 05 | - | 05 |
| | 65 | 70 | 04 | 09 |

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவு ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் சபையின் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியதாக அவதானிக்கப்படவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) செலவுக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்